# கிண்ணியாவின் வரலாற்றுப் பூர்வீகமும் அதில் தென்படும் சமூகப் பண்பாடுகளும் : ஓர் ஆய்வு

*[1]Mr.Abdur Raheem Mohamed Jesmil [2]Mr.Mohamed Thamby Habeebullah*
*[1]Cultural Officer, Kattankudy Herritage Mesium, Department of Archiology.email:raheemjesmil@yahoo.com*
*[2]Lecturer, Faculty of Islamic studies and Arabic Language, South Eastern University of Sri Lanka*
*Email: habeebullah@seu.ac.lk*

**ஆய்வுச் சுருக்கம்:** கிண்ணியாப் பிரதேசம் திருகோணமலை மாவட்டத்தில் முஸ்லிம் பெரும்பான்மையைக் கொண்டு அமைந்துள்ள ஒரு தொன்மை வரலாற்றுப் பிரதேசமாகும். இது திருகோணமலை இயற்கைத் துறைமுகத்தை அண்டிய பிரதேசத்தில் அமையப்பெற்றுள்ளதுடன் அது எல்லா வகையிலும் வளங்கொழிக்கும் பிரதேசமாகவும் மானிட சமூகத்திற்கு தேவையான சகல வளப்பரம்பலையும் நிரப்பமாகக் கொண்டும் அமையப்பெற்றுள்ளது. இந்த ஆய்வானது திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா பிரதேசத்தின் பூர்வீக வரலாறு மற்றும் அதனூடே வளர்ச்சியடைந்து வந்துள்ள சமூகப்பண்பாடுகள் என்பவற்றை மையப்படுத்திய வகையில் அமைந்துள்ள ஓர் ஆய்வாகும். கிண்ணியாப் பிரதேச வரலாறானது பல்வேறு கால கட்டங்களில் திருகோணமலை துறைமுகத்தையொட்டி நிகழ்ந்த மாற்றங்களின் பின்புலங்களின் அடிப்படையில் அமைந்த குடியேற்றங்கள் என்பதை அறிய முடிகின்றது. இக்குடியேற்றங்களானது மத்திய ஆசியா, ஆபிரிக்கா, கிழக்காசியா மற்றும் தென்னாசியா போன்ற நாடுகளிலிருந்து வியாபார நோக்கத்திற்காகவும், வேறு பல நோக்கங்களிற்காகவும் வந்தவர்கள் என்றும் இவர்களின் வரலாற்றை ஆராயும் போது அறிய முடிகின்றது. இவ்வாறு வந்து குடியோறிவர்களாலும் உள்ளூர்வாசிகளாலும் ஒருங்கிணைந்த ஒரு பண்பாட்டு வரலாறு தோற்றம் பெறுவதையும் அதுவே கிண்ணியா பிரதேச வரலாறாகவும் பண்பாடாகவும் அமைகின்றது என்பதை இவ்வாய்வு எடுத்துரைக்கின்றது.

**பிரதான சொற்பதம்** : கிண்ணியாவின் பூர்வீகம், வரலாறு, ஜாகுவ இனத்தினர். சமூகம், பண்பாடு

## ஆய்வு அறிமுகம்

வரலாற்றின் எல்லாக் கால கட்டங்களிலும் கிழக்கின் மிகுந்த வனப்பும் சிறப்பும் மிக்க ஒரு மாவட்டமாக திருகோணமலை காணப்பட்டு வந்திருக்கிறது. இயற்கை வளமும் எழில் கொஞ்சும் அழகும் இப்பிரதேசத்திற்கு வலுவூட்டுவதாக அமைவதோடு மூவின மக்களும் செறிந்து வாழும் ஒரு பிரதேசமாகவும் பல்லின கலாசாரத் தன்மையும் (Multi Culturalism) இம்மாவட்டத்திற்கே உரிய சிறப்பியல்புகளை எடுத்துக் காட்டுகின்றன. திருகோணமலை மாவட்டம் (கந்தளாய், தம்பலகாமம், மூதூர் ஆகிய பிரதேசங்கள் உட்பட) சோழராட்சிக் காலத்தில் முக்கியம் பெற்று விளங்கிய இடமாகும். இலங்கையின் வரலாற்றில் ஏற்பட்ட தென்- மேற்கு நோக்கிய இடப்பெயர்வின் பின்னர் (13ஆம் நூற்றாண்டின் பின்னர்) இப்பகுதி இலங்கை வரலாற்றில், ஏறத்தாள ஒல்லாந்தர் வருகை வரை, அதிகம் பேசப்படாத ஒரு பிரதேசமாகவே இருந்து வந்துள்ளது.

மட்டக்களப்பின் தெற்குப் பிரதேசங்களும், திருகோணமலை மாவட்ட வட பிரதேசங்களும் 1940கள் முதலே சிங்களக் குடியேற்றத்துக்கு உட்பட்டன. அங்கு ஏற்கனவே சில பழைய சிங்களக் கிராமங்கள் இருந்து வந்துள்ளன. ஆனால் 1940களின் பிற்பகுதியிலிருந்து இப்பகுதியினரில் தமிழ், முஸ்லிம் சீவிய இருப்பு பிரச்சினை உருவானதைத் தொடரந்து அவர்களின் குடிப்பரம்பல் வலுப்பெறத் தொடங்கின. இந்த வகையில் வரலாற்றில் செல்வாக்குப் பெற்று விளங்கும் கிண்ணியாப் பிரதேசத்தின் பூர்வீகம் மற்றும் வாழ்வியல் அமிசங்கள் பற்றிய ஆய்வுகள் இது வரை எதுவும் வெளி வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். பொதுவாக திருகோணமலை மாவட்டத்தில்

சிங்களவர்களின் பண்பாட்டுச் செறிவைக் காட்டும் பிரதேசமாக சேருவிலயும், தமிழர்களின் பண்பாட்டுச் செறிவைக் காட்டும் பிரதேசமாக திகோணமலை பட்டிணமும் சூழலும் இருப்பது போல முஸ்லிம்களின் காலசாரத்தையும் பண்பாட்டையும் எடுத்துச் சொல்லும் பிரதேசமாகக் கிண்ணியா பிரதேசம் அடையாளப்படுத்தப்படுகின்றது. அந்தவகையில் இவ்வாய்வு கிண்ணியாப் பிரதேசத்தின் வரலாறையும் பண்பாடுகளையும் தேடலாக கொண்ட ஒரு ஆய்வாக அமைகின்றது.

**ஆய்வுப் பிரச்சினை**

திருகோணமலை மாவட்டத்தில் காணப்படும் கிண்ணயிாப் பிரதேம் முஸ்லிம்களை 98% கக் கொண்ட ஒரு பிரதேசம் என்ற ரீதியில் இதன் வரலாற்றுத் தொன்மை, சமூகப் பண்பாடுகள் என்பன எவ்வாறான நிலையில் காணப்படுகிறது என்பதை ஆராயும் ஒரு கள ஆய்வாகும்.

**ஆய்வின் நோக்கம்**

இந்த ஆய்வானது பின்வரும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

1. கிண்ணியா முஸ்லிம் சமூகத்தின் பூர்வீக வரலாற்றைத் தெரிந்து கொள்ளல்
2. கிண்ணியா பூர்வீக வரலாற்றின் வழியாக முஸ்லிம் சமூகத்தில் தென்படும் சமூகப் பண்பாடுகளை வெளிக்கொனரல்

**ஆய்வு முறையியல் :**

இவ்வாய்வானது முதலாம் நிலைத்தரவுகள் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் ஆகியவற்றை ஆய்வு மூலங்களாகக் கொண்டு பண்புசார் பகுப்பாய்வு (னுநளஉசனிவளைந யுயெடலவளைடயட சுநளநயசஉா) இவ்வரலாற்று ஆய்வுக்கட்டுரைய இதனைத் துள்ளியமாக கணிப்பீடு செய்வதற்கு திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியாப் பிரதேசம் கள ஆய்வுப் பிரதேசமாக தெரிவு செய்யப்பட்டு கள ஆய்வின் மூலம் பெறப்பட்ட தரவுகள் நேர்காணல், அவதானிப்புகள் என்பவற்றை இவ்வாய்வு முதல் நிலைத் தரவுகளாக கொண்டுள்ளது. இவ்வாறான தரவுகளைப் பெறுவதற்கு 10 மாதிரிகள் (எழுமாற்று முறையில் அமைந்த மாதிரிகள்) தெரிவு செய்யப்பட்டன. மாதிரிகள் அனைவரும் திருகோணமலையைச் சேர்ந்த, அதிகமாக கிண்ணியாப் பிரதேசத்தைச் சேர்ந்த முஸ்லிம் மக்களாவர். இரண்டாம் நிலைத் தரவுகளாக, திருகோணமலை வரலாறு தொடர்பான சிலாசணங்கள், நூல்கள், கடடுரைகள் என்பன இவ்வாய்விற்குப் பயன்படுத்தப்பட்டன.

**முன்னைய ஆய்வுகள்**

இத்தலைப்புடன் தொடர்பான நேரடியான நூல்கள் பெரியளவு காணப்படாத போதிலும் ஆங்காங்கே எழுதப்பட்டுள்ள சிறிய நூல்கள் மற்றும் கட்டுரைகள், வரலாறு தொடர்பான திரட்டுகள் பதிப்புச் செய்யும் போது கிண்ணயாவின் பூர்வீகம் பண்பாட்டு வழுமியங்கள் தொடர்பாக எழுதப்பட்டுள்ள தரவுகளும் இவ்வாய்வில் சேர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடப்தக்கதாகும். இந்த வகையில் கிண்ணியா மாணவர் பேரவையினால் 2006 இல் வெளியிடப்பட்ட “ கிண்ணியா” எனும் நூலில் கிண்ணியாவின் வரலாறு பற்றி சுருக்கமாக குறிப்பிடப்படுவதுடன் கல்வி, பொருளாதாரம், அரசியல் போன்ற விடயங்கள் பற்றியும் விளக்கப்பட்டது. மேலும் எம்.எஸ்.எம். ஷரீப் அவர்கள் எழுதப்பட்டு கிண்ணியா

மத்திய கல்லூரியினால் 2010 இல் வெளியிடப்பட்ட ''அதிர்வு'' சஞ்சிகையில் கிண்ணியாவின் பூர்வீக வரலாறு பற்றிய ஒரு கட்டுரையை ஓரளவு விரிவாக எழுதியுள்ளார். கிண்ணியா சுமைய்யா அறபுக் கல்லூரியின் 4வது பட்டமளிப்பு விழாவை முன்னிட்டு வெளியிடப்பட்ட ''சுமைய்யா'' எனும் சஞ்சிகையில் கிண்ணியாவின் வரலாறு பற்றி கட்டுரை ஒன்று எழுதப்பட்டுள்ளது.

பொதுவாக மேற்குறித்த ஆக்கங்கள் யாவும் கிண்ணியா வரலாறு, கல்வி, பொருளாதாரம் அரசியல் போன்ற விடயங்கள் தொடர்பாக சிறியளவு விளக்கிய போதிலும கிண்ணியாவின் பூர்வீகம் மற்றும் பண்பாடுகள் தொடர்பாக நேரடியாக எதுவும் இதுவரை எழுதப்படவில்லை என்பது குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும்.

**கலந்துரையாடலும் கண்டுபிடிப்புக்களும்**

1. **கிண்ணியா பிரதேசமும் முஸ்லிம்களும்**

இலங்கைத் திருநாட்டின் சூரியன் உதயமாகும் கீழ் திசையில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த திருகோணமலைத் துறைமுகத்தையும் தென் மேற்கில் தம்பலகாமக் குடாவையும், சீனக்குடா வானூர்தி நிலையத்தையும் வடக்கு எல்லையாக இருக்கச் சோழியன் ஓடையையும், கந்தளாய் குளத்தையும், மேற்குத் திசையாக மகாவலிகங்கையும், தெற்குத் திசையாக கொட்டியாரக்குடாவையும் (தோணா) கிழக்குத் திசையாக தீவுகளையும், தீபகற்பங்களயையும் கொண்ட வனப்பு மிகு ஒரு கழிமுகப் பிரதேசமே கிண்ணியாவாகும்.
கிண்ணியாப் பிரதேசம் 31 கிராம சேவகர் பிரிவுகளையும், 99 கிராமங்களையும் உள்ளடக்கியுள்ளது. கிண்ணியாப் பிரதேச செயலகம் கிண்ணியா நகர சபை, குறிஞ்சாக்கேணி பிரதேச சபை என இரண்டு உள்ளூராட்சி மன்றங்களைக் கொண்டும் அமைந்துள்ளது. கிண்ணியா நகர சபை எல்லைக்குள் 17 கிராம சேவகர் பிரிவுகளும், கிண்ணியா பிரதேச சபையினுள் 14 கிராம சேவகர் பிரிவுகளுமாக மொத்தம் 31 கிராம சேவகர் பிரிவுகளைக் கொண்டு காணப்படுகிறது. கிண்ணியாவின் மக்கள் தொகையை அடிப்படையாகக் கொண்டு மற்றொரு பிரதேச செயலத்திற்கான மும்மொழிவு அடங்கிய கோரிக்கை அரசாங்கத்திடம் 2011 இல் முன்வைக்கப்பட்ட போதும் கடந்த காலங்களில் உள் நாட்டில் இடம் பெற்ற இனப்பிரச்சினையினாலும், கடந்த 2004 இல் ஏற்பட்ட சுனாமி பேரலையினாலும் திருகோணமலை மாவட்டத்தில் அதிகமாகப் பாதிக்கப்பட்ட பிரதேசமாக கிண்ணியாப் அடையாளப்படுத்தப்பட்டிருக்கிறது. திருகோணமலை மாவட்ட முஸ்லிம்களின் சமூக, அரசியல் தலைமைத்துவத்தை ஏற்று நடாத்தும் பொறுப்பும் கிண்ணியாவைச் சார்ந்த முஸ்லிம்களையே சாரும். இம்மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்படும் பாராளுமன்ற உறுப்பினர்களும் பெரும்பாலும் கிண்ணியாவைச் சார்ந்தவர்களே என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

பல்வேறு வகையான வள உள்ளீடுகளை கொண்டுள்ள கிண்ணியாப் பிரதேசம் திருகோணமலை மாவட்டத்தின் முஸ்லிம் மக்கள் தொகை அடர்த்தியைக் கொண்ட முக்கியமான கேந்திர நிலையமாக விளங்குவதும் குறிப்பிடத்தக்கதாகும். இது பெரும்பான்மை முஸ்லிம் பிரதேசமாக இருந்த போதிலும் இங்கு 2%னர் தமிழர்களும் வாழ்கின்றனர்.

2. **கிண்ணியா முஸ்லிமகளின் பூர்வீக வரலாறு**

கிண்ணியாவின் பூர்வீக வரலாறு பல நூற்றாண்டு பழமை வாய்ந்ததென்பதை எழுதப்பட்ட ஆவணங்களும் செவிவழிச் செய்திகளும் எமக்கு கிடைக்கப் பெறுகின்ற ஆதாரங்களும் எடுத்துக்கூறுகின்றன. மேற்கே மொறோக்கோ முதல் கிழக்கே இந்தோனேசியா வரையிலான மொழி, பண்பாடு பழக்க வழக்கங்களில் மாறுபட்ட மக்கள் கூட்டம் இஸ்லாம் என்னும் ஒரே குடையின் கீழ் அறபு, ஆப்கான், உருது, ஹிந்தி, மலையாளம், ஜாவா ஆகிய மொழிகளையும் தமிழ் என்னும் சாகரத்துள் சங்கமித்த ஒரே கலாசாரப் பண்பாட்டுப் பாரம்பரியத் தனித்துவத்துடன் வாழும் மக்களைக் கொண்ட இடமே கிண்ணியா.

திருகோணமலைப் மாவட்டத்தில் காணப்படும் பெரும்பாலான முஸ்லிம் கிராமங்கள் தோன்றுவதற்கு கிண்ணியாவே மூல காரணமாக இருந்துள்ளது. அதாவது அது தொட்டிலாக இருந்துள்ளது எனக் கூறலாம். குறிப்பாகக் கிழக்கையும், மேற்கையும் வர்த்தக ரீதியாக இணைக்கும் கேந்திர மையமாக திருகோணமலை விளங்கியது. மேற்கிலிருந்து வந்த அறேபிய வர்த்தகர்களும் இந்திய வர்த்தகர்களும் கிழக்கே இருந்து வந்த சீன வர்த்தகர்களும் சந்திக்குமிடமாக திருகோணமலைத் துறைமுகம் இருந்துள்ளது. துறைமுகத்தின் மேற்கிலிருக்கும் சீனக்குடாவே வர்த்தகமையமாக விளங்கியதால் அவ்விடம் சீனக்குடா என அழைக்கப்பட்டது. இன்றும் அழைக்கப்படுகிறது.

வரலாற்றாசிரியர்கள் 12ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் பெருமளவான முஸ்லிம்கள் திருகோணமலைத் துறைமுகத்தைச் சூழ வாழ்ந்ததாகக் குறிப்பிடுகின்றனர். (Colvin R de Silva,1975-1983, P:2) இரண்டாம் உலக யுத்தம் தொடங்குவதற்கு முன்னர் சீனக்குடா, வேப்பங்குடா, நாச்சிக்குடா, மக்குலூற்று, நீரோட்டுமுனை, கரிமலையூற்று, சின்னபிள்ளை சேனை, கரடிப்போர் என அழைக்கப்படும் குடாக்கரை பிரதேசம் முழுவதும் முஸ்லிம் குடியேற்றங்களே இருந்தன. இதற்கு இப்பிரதேசங்களில் காணப்படும் பள்ளிவாசல்களும் காணி உறுதிகளும் மையவாடிகளும் சான்றாக விளங்குகின்றன. (பார்க்க படம்: பின்னிணைப் ,Trincomalee Arabic Stone Inscription,*Description Source: Colombo Museum*) முஸ்லிம் குடியிருப்புக்களை அகற்றி விட்டே சீனக்குடா விமான நிலையம் அமைக்கப்பட்டதாக கூறப்படுகின்றது. (நேர்காணல்: 2017-09-3 தௌபீக் எம்.ஈ.எச்.எம்,கிண்ணியா) ஐரோப்பியரின் வருகைக்கு முன்னரே இவ்வியாபாரக் குடியேற்றம் இருந்துள்ளது. இஸ்லாத்தின் ஆரம்ப காலப்பகுதியிலேயே அதாவது 8ஆம் நூற்றாண்டிலே பனூ ஹாசீம் வர்த்தகத்தினர் திருகோணமலையில் குடியேற்றத்தை அமைதத்தாக கூறப்படுவதையும் கவனத்தில் கொண்டால் ஆயிரம் வருடங்களுக்கு மேலாக முஸ்லீம்கள் வாழ்ந்த இடமாக திருகோணமலை விளங்குகின்றது எனக் கூறலாம். (காலிதீன் கே.எம். எச்.1986, ப.4)

கன்னியா வெந்நீரூற்றுக்கு அருகாமையில் காணப்படும் அடக்கஸ்தலமும் வெந்நீரூற்றுக்குத் தெற்கில் காணப்படும் 40 அடி நீள அடக்கஸ்தலம் மற்றும் பல இடங்களில் பெயர் குறிப்போடு கண்டெடுக்கப்பட்ட மீஸான்[2] பலகைகளும் நீண்ட காலத்திற்கு முன்னரே முஸ்லீம்கள் இப்பகுதியில் குடியிருந்தமையை உறுதிப்படுத்தும் சான்றுகளாக அமைகின்றன. 16ஆம் நூற்றாண்டளவில் கண்டியரசர்களும் முஸ்லிம்களைத் தமது நலன் கருதி கிழக்கு மாகாணத்திற்கு அனுப்பி வைத்தனர். போர்த்துகீசரால் துரத்தப்பட்ட மேற்கு மாகாண முஸ்லீம்களும் இந்நோக்கத்திற்காகவே

[2] .மீசான் கட்டை: அடக்கம் செய்த பின் அடையாளத்திற்காக தலைமாட்டிலும் கால்மாட்டிலும் வைக்கப்படும் கட்டை.

கண்டியரசன் செனரதனால் கிழக்கு மாகாணத்தில் குடியமர்தப்பட்னர். கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களின் குடிப்பரம்பலுக்குப் போர்த்துகீசரும் ஒரு காணரமாகும். கண்டியரசனுக்கும் போர்த்துகீசருக்குமிடையிலான திருகோணமலைத் துறைமுகம் தொடர்பான முரண்பாடுகள் எழவே 1623 இல் துறைமுகத்தில் போர்த்துக்கீசர் கோட்டை கட்டியமை 1626 இல் மேல் மாகாணத்திலிருந்து முஸ்லிம்களை போர்த்துக்கீசத் தேசாதிபதி திஸா வெளியேற்றியமை போர்த்துகீசரின் திருகோணமலைக் கோட்டையைக் கைப்பற்ற ஒல்லாந்தர் போர் தொடுத்தமை போன்ற காரணங்களால் வலுப்பெற்றது. (Silva K,M,D ,1972, p.178) ஏற்கனவே தமது வணிகத்தை முற்றாக இழந்த துறைமுகத்தைச் சூழ வாழ்ந்த முஸ்லிம் மக்களிடையே தாமும் துரத்தி அடிக்கப்படலாம் அல்லது தமது இருப்புக்கு ஆபத்து ஏற்படலாம் என்ற அச்சம் நிலவி வந்தது. (Phillipus Baldaeus, 2001, P.67) ஆகவே அவர்கள் இரண்டு இலக்கு நோக்கி உடனடியாக தீர்மானிக்க வேண்டியிருந்தது.

1. இழந்த வர்த்தகத்துக்குப் பதிலாகப் புதிய பொருளாதார முறையொன்றைக் காணுதல்.
2. யுத்த சூழ்நிலையிலிருந்து பாதுகாப்புத் தேடல்.

இதன் அடிப்படையில் போர்த்துக்கீசரின் வருகையினால் தமது வர்த்தகத்தை இழந்து திக்குத் திசையற்று நின்ற முஸ்லிம்களுக்கு கிண்ணியாப் பிரதேசம் கையொடுத்தது எனலாம். கிண்ணியாப் பிரதேசத்தில் வாழ்வாதாரங்களுக்கான சகல வளங்களும் போதியளவு காணப்பட்டன. பரந்த நிலப்பரப்போடு கூடிய காடுகளும், வயல் நிலங்களுக்கான வாய்ப்புக்களும் சிற்றாருகளும், ஓடைகளும் கடல் வளமும் திரவியங்களைப் பெற்றுக் கொள்ள வாய்ப்புக்களாக இருந்தன. அந்த வகையில் அவர்களது முழு நோக்கங்களையும் பூர்த்தி செய்யக் கூடிய வளம் கொண்டதாக கிண்ணியா விளங்கியது.

தமது குடும்ப நன்னீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்ய இலகுவாகக் கிணறு வெட்டக் கூடிய தாழ்ந்த மணல் பூமி அவர்களை மேலும் ஊக்குவித்திருக்கலாம். குடாக்கரைப் பிரதேசம் கற்பாறைகள் உள்ள இடங்களாகும். அங்கு கிணறு வெட்டுவதில் பெரும் பிரயத்தனங்கள் செய்ய வேண்டியிருந்தன. கிண்ணியாவில் நிலக்கிணறு வெட்டி ஒரு நாளிலே நீரைப் பெற்றுக் கொள்ளலாம். இத்தகைய நிலக் கிணறுகளே கிண்னியாவின் பழைமை வாய்ந்த கிணறுகளாக இருந்தன.

கிண்ணியாவில் முதல் குடியேற்றத்தை அமைத்தவர்களும் அதன்பின் தொடர்ச்சியாக வந்தவர்களும் எங்கிருந்து வந்தார்கள் என்ற விபரங்களுடன் அவர்களது சந்ததியினர் சிலர் குறிப்பு வடிவிலும், தத்தம் பெற்றோர் வழியாகவும் அறிந்து வைத்திருக்கும் ஆதாரங்களைக் கொண்டே கிண்ணியாவின் பூர்வீகத்தை அறிய முடிகின்றது. இந்த ஆதாரங்களின் படி கிண்ணியாவில் குடியேறியோர் நான்கு பக்கங்களாகக் குடியேறியுள்ளனர் என அறிய முடிகின்றது. குடாக்கரையூடாக ஒரு பகுதியினரும் தம்பலாகாமம் வழியாக இன்னொரு பகுதியினரும் மற்றுமொரு பகுதியினர் மூதூர் பிரதேசத்தினூடாகவும் குடியயேறியிருக்கின்றனர். கடல் வழியாக வந்தவர்கள் தான் ஜாவா இன இராணுவத்தினர் என அறிய முடிகின்றது. அந்தவகையில் கிண்ணியாவின் ஆரம்பகால குடியிருப்புக்கள் பல்வேறு பிரதேசங்களிலிருந்து பல கால கட்டங்களில் இடம் பெற்றிருப்பதை அவதானிக்க முடிகின்றது. இந்த வகையில் கிண்ணியாவில் இடம் பெற்ற குடியிருப்புக்களை பின்வருமாறு நோக்கலாம்.

1. **முதலாவது குடியிருப்பு**

கிண்ணியாவில் முதலாவது குடியேறியவர்களாக 1632ஆம் ஆண்டில் ஒல்லாந்தர்களினால் மலாயத் தீவிலிருந்து கொண்டுவரப்பட்ட படையணியினரும் ஒல்லாந்த படைப்பிரிவிலிருந்த ஒரு பிரிவினர் தற்செயலாக குடியேறிவர்களையும் குறிப்பிடுகின்றனர். இவர்கள் போர்த்துக்கேயருக்கு எதிராகத் கிண்ணியாவின் வடக்கு கிழக்கு கரையோரங்களில் பாதுகாப்பு அரண்களை அமைத்தனர். அத்துடன் குடியிருப்புக்களையும் அமைத்து கிண்ணியாவில் தொடர்ந்து வாழ்ந்தனர். இவர்களின் வழித் தோன்றல்கள் கிண்ணயிா பெரியாற்றுமுனை எனுமிடத்தில் செறிவாகவும் ஏனைய பிரதேசங்களில் ஐதாகவும் வாழ்கின்றனர். இவர்கள் இன்னும் மலாய் மொழியிலுள்ள ஒரு சில சொற்களைத் தமிழ் மொழியில் கலந்து பேசுகின்றனர். (Percival, Robert, ESQ, 1803, p.64)

2. **இரண்டாவது குடியிருப்பு**

1638ஆம் ஆண்டில் கண்டி மன்னனாக இருந்த செனரதினால் என்பவரினால் குடியேற்றப்பட்ட மக்களே கிண்ணியாவில் இரண்டாவது குடியிருப்பாகும். (Vasundhara Mohan, 1987, p.16.) இவர்கள் கிண்ணியாவின் தென் மேற்குப் பிரதேசத்தில் உள்ள தம்பலகாமம் என்ற இடத்தில் குடியேற்றப்பட்டு நெற் செய்கை, உப உணவுப் பயிர், காட்டுத் தொழில், சேனைத் தொழில், வைத்தியத் தொழில் என்பனவற்றில் ஈடுபட்டு வந்தனர். பின்னர் 1696 ஆம் ஆண்டில் கிண்ணியாவின் மேற்குக் கரையோரங்களில் குடியிருப்புக்களை அமைத்துக் கொண்டனர். இவர்களின் பரம்பரையினர் ஒரு சிலர் இன்றும் நாட்டு வைத்தியம், முறிவு வைத்தியம் போன்றவற்றில் ஈடுபட்டு வருகின்றனர். சிலர் மீன் பிடித்தொழில், மட்டி எடுத்தல் போன்ற தொழில்களிலும் ஈடுபட்டு வருவதைக் காணலாம்.

3. **முன்றாம் குடியிருப்பு**

1805ஆம் ஆண்டு ஆப்கானிஸ்தானிலிருந்து வியாபாரத்திற்கு வந்த ஒரு சிலர் கிண்ணியாவில் மூன்றாவது குடியிருப்புக்களை அமைத்துக் கொண்டனர். இந்த ஆப்கானிகளுக்கு கிண்ணியா மக்கள் அன்பையும் ஆதரவையும் வழங்கி அவர்களுடன் நெருக்கமாக, ஒன்றாகக் கலந்திருந்தமையினால் இங்கேயே தங்கிவிட்டனர். பின்னர் திருமணம் செய்து இப்பிரதேசத்திலேயே வாழத்தலைப்பட்டனர். இவர்களின் வழித்தோன்றல்களும் குடும்பமும் இங்கு தொடர்ந்து வாழ்ந்து வருகின்றனர். 1000க்கு மேற்பட்டவர்களாக இவர்கள் உள்ளனர். இவர்கள் ஆப்கானிஸ்தானிலுள்ள குடும்பத்துடன் இன்றும் தொடர்பு வைத்துள்ளனர். (ஏ. எல். அப்துல் மஜித் 1985)

4. **நான்காவது குடியிருப்பு**

1814 ஆம் ஆண்டு இந்தியாவிலிருந்து வந்த வியாபாரிகளினாலேயே கிண்ணியாவில் நான்காவது குடி உருவாக்கப்பட்டது. இவர்களுக்கு இங்குள்ள மக்கள் ஆதரவு அளித்து அன்பு காட்டியதனால் இங்கேயே திருமணம் செய்து தொடர்ந்து வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் அப்போது சமய நோக்கம் கருதிப் பள்ளிவாசல்களையும் வியாபாரத் தளங்களையும் அமைத்தனர். அவற்றில் கட்டப்பட்ட ஆண்டுகள் 1814 என குறிப்பிடப்பட்டுள்ளது. இன்று இவர்களின் வழித்தோன்றல்கள் கிண்ணியாவில் 10,000 க்கு மேல் காணப்படுகின்றனர். (ஏ.எல். அப்துல் மஜீத் 1985)

5. **ஐந்தாவது குடியிருப்பு**

1883ஆம் ஆண்டு மொரோக்கோ நாட்டிலிருந்து பிரித்தானியர்களினால் நாடு கடத்தப்பட்ட ஒரு சிலர் இங்கு வந்து ஐந்தாவது குடியிருப்புக்களை அமைத்தனர். இவர்கள் கிண்ணியாவில் திருமணம் செய்து தங்களுடைய சந்ததிகளைப் பெரிதாக்கியுள்ளனர். இன்று இவர்கள் 2000க்கு மேற்பட்ட மக்களாகக் காணப்படுகின்றனர். இச்சந்ததியினர் மொரோக்கோ நாட்டு மக்களின் உடல் அமைப்பினையும் தோற்றத்தையும் கொண்டு இங்கு வாழ்ந்து வருகின்றனர். (ஏ.எல்.அப்துல் மஜீத் 1985)

### 6. ஆறாவது குடியிருப்பு

1887ஆம் ஆண்டில் பாகிஸ்தானில் இருந்து வந்த வியாபார குழுவினரும் கிண்ணியாவில் குடியிருப்புக்களை உருவாக்கி வாழ்ந்து வருகின்றனர். இவர்களுடைய பரம்பரையும் இன்று கிண்ணியாவில் குறிப்பிடக்கூடியளவில் வாழ்ந்து வருகின்றனர். (ஏ.எல்.அப்துல் மஜித் 1985)

## 3. கிண்ணியா முஸ்லிம் சமூகத்தில் தென்படும் சமூகப் பண்பாடுகள்

கிண்ணியாப் பிரதேசத்தில் காணப்படும் கப்பல் தட்டிய தளமான கப்பல்துறை மரக்கலங்களில் அபயம் தேடி வந்த ஜாவா மக்கள் பட்ட துன்பங்களின் அடையாளச் சின்னமாகும். இவர்கள் தம்பலகாமத்தில் விவசாய செய்கையிலும், கிண்ணியாவின் கடலோடைகளில் மீன்பிடித் தொழிலையும் தங்களின் ஜீவனோபாயமாகக் கொண்டு வாழ்ந்து வந்தனர். இவ்வாறான சூழ்நிலையில் இவர்களின் வாழ்க்கையில் சில கோஸ்டி மோதல்கள் ஏற்பட்டன. அக்கோஸ்டி மோதலானது உள்ளூர் சோனகர், ஜாவகர் என்ற அடிப்படையில் அமைந்திருந்தது. இதற்கு பொருளாதாரமும் ஒரு காரணமாக அமைந்திருந்தது. காரணம் சாதாரண மக்கள் உணவு, உடை, கலாச்சார பண்பாட்டில் ஏனையவர்களுடன் ஒருவருக்கொருவர் ஒத்து வாழப் பழகிக் கொண்டனர். ஆனால் பள்ளிவாயல்களில் மரைக்கார்மார்களாக[3] இருப்பவர்கள் சமூகத் தலைமைத்துவத்தை பெறுவதிலும் மஸ்ஜிதுகளை பராமரிக்கும் பொறுப்பை ஏற்படுத்துவதிலும் ஜாவா சமூகத்தினர் தங்களுக்கு போட்டியாக அமைந்துவிடுவார்களே எனக் கருதினர். இவ்வதிகார போட்டியின் காரணமாகவே பழைய பெரிய பள்ளிவாயலின் கட்டுப்பாட்டிலிருந்து பிரிந்து ஜாவா சமூகத்தினர் தங்களின் சமூகத்தைப் பிரதிபலிக்கும் வகையில் ஜாகுவப் பள்ளியை உருவாக்கியதாகக் கூறப்படுகின்றது. (நேர்காணல்: 2017-9-4,அஸீஸ்இ கிண்ணியா.) இக்கோஸ்டி மனப்பான்மை இலங்கையில் சர்வஜன வாக்குரிமை அறிமுகப்படுத்தப்பட்டதன் பின் ஏற்பட்ட சமூக அரசியல் பொருளாதார மாற்றங்களால் மறைந்து போயுள்ளது. இன்று பெரிய தோனா தொடக்கம் வட்டுக்கச்சி வரை கிட்டத்தட்ட 100 மேற்பட்ட பள்ளிவாயல்கள் உள்ளன. இப்பள்ளி வாயல்களின் நிர்வாகத் தெரிவின் போது அன்று இருந்த ஜாவக சோனக மனப்பான்மை ஏற்படுவதில்லை. மாறாக பொருத்தமானவர் தலைவராக்கப்படுகின்றார்.

இம்மாற்றங்கள் வருவதற்கு முன்னர் கிண்ணியா மக்கள் தங்கள் சோனக ஜாவக பாரம்பரியங்களை அப்படியே பின்பற்றியவர்களாகத் காணப்பட்டனர். சோனகர் தலை மொட்டையடித்திருப்பர். சிறுவர்கள் முன் நெற்றியில் குடும்பியிட்டு தலையின் மற்றைய பகுதியை வழித்து மொட்டையடித்திருப்பார்கள். பிராமணரின் குடும்பிக்கும் இதற்கும் முன் பின் மாற்றமாக இருந்தது. வளர்ந்த பின் குடும்பியை வெட்டி நாகூருக்கு நேர்த்தியாக அனுப்பியும் இருக்கின்றனர். ஜாவகர் மொட்டையடித்தாலும் லேஞ்சி (கூர்ப்பட்ட ஒருவகை) தொப்பி அணிந்திருப்பார்கள்.

[3] .மரைக்கார்: பள்ளிவாயல்களில் நிறுவாகம் செய்பவர்களை அழைக்கும் பிரதேச வழக்கு மொழி

பெரும்பாலும் ஜாவகர் ஜிக்கு தலைமுடியை வெட்டி இருப்பார்கள். மற்றவர் ஜிக்கு முடி வைத்திருந்தால் நீ ஜாவகனா? என கேள்வி கேட்கும் அளவுக்கு அது அவர்களின் வழமையாக இருந்தது. லேஞ்சி அவர்கள் உடுத்தியிருக்கும் சாரம் என்பன அவர்களை ஜாவகர்கள் என பறை சாற்றும் ஆடைகளாகும். சுமார் 40 வருடங்களுக்கு முன் துருக்கித் தொப்பியும், ஜாவகத் தொப்பியும் போட்டிபோட்டு அணியப்படும் ஆடைகளாகும். துருக்கித் தொப்பிப் பழக்கம் வீழ்ச்சியடைந்தாலும் ஜாவகத் தொப்பி அணியும் வழமை அன்மைக் காலம் வரை இருந்தது. (நேர்காணல்: 2017-9-4, அஸீஸ், கிண்ணியா)

கிண்ணியாவின் மக்கள் மதிக்கும் தலைவர்களான மரைக்காமார் உயர் கௌரவத்திற்குடையவர்களாகவும், கண்ணியத்திற்குறியவர்களாகவும் மதிக்கப்பட்டனர். ஆட்சியில் இருப்போர் கூட மரைக்கார்மார், தலைவர், அண்ணாவிமார்களை அணுகித் தங்கள் ஆட்சிப் பொறுப்புக்களையும், உத்தியோகங்களையும் வழங்கினர். ஜாவகர்களின் வருகையினால் கிண்ணியா மக்களின் வாழ்வியலும், பண்பாடும், குறிப்பிடத்தக்க செல்வாக்கிற்கு உட்படுத்தப்பட்டன. அவர்களின் அணியும் உள்ளாடை சிறுவால் எனப்படும். அவர்கள் புகைப்பது புகையிலையான தென்னங் குருத்தோலை கொண்டு செய்யப்படும் "ரோக்கை" ஆகும். வயது போன கிழவரை அப்பா என்று அழைக்காமல் ஜாவகரை "காக்கி" என்று தான் அழைப்பார்கள். பாட்டிமாரை "நேனே" என்று அழைப்பதையே விரும்பினார்கள். சாச்சி, சாச்சா அப்பா என்பன பாரம்பரிய சொற்களேயாகும். இவ்வாறான சொற்பிரயோகங்கள் அதிகமாக கிழக்கு முஸ்லிம்களின் உறவு முறையில் காணப்படுவது ஜாவா சமூகத்தின் செல்வாக்கே காரணமெனலாம். (நேர்காணல்: 2017-09-3 எம்.ஈ.எச். தௌபீக்)

**முடிவுரை**

கிண்ணியாவின் வரலாற்றையும் அதன் பூர்வீகத்தையும் நாம் ஆராயும் போது உலகின் பல்வேறு இனக்குழுக்களும் குடியேறிய ஒரு இடமாகக நாம் கிண்ணியா பிரதேசத்தைக் காணுகின்றோம். அவ்வாறே உள்நாட்டிலிருந்தும் பல்வேறு பாகங்களிலிருந்தும் உதாரணமாக கொழும்பு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு போன்ற பிரதேசங்கிலிருந்தும் மக்கள் கிண்ணியாவுக்கு குடிபெயர்ந்து வாழ்ந்து வந்ததை இந்த ஆய்வின் மூலம் அறிய முடிகின்றது. இதற்குக் காரணம் இங்கு இயற்கையாக அமைந்த திருகோணமலைத் துறைமுகமாகும். திருகோணமலைத் துறைமுகத்திற்கு பல்வேறு தேவையின் நிமிர்த்தம் உலகின் பலபாகங்களிலிருந்தும் நாடி வந்த உள்நாட்டு வெளிநாட்டு மக்கள் தங்கிப் பின்னர் தங்களது குடியிருப்புகளை இங்கு நிரந்தர குடியிருப்புகளாக அமைத்துக்கொண்ட வரலாற்றையே கிண்ணியாவினுடைய வரலாற்றினுடாக நாம் அறிந்துகொள்ள முடிகின்றது. இந்தப் பல்வகையான கலாசாரப் பின்புலங்கள் ஓன்றிணைந்து கிண்ணியாவின் வரலாற்றுக்கும் கலாசாரத்திற்கும் பண்பாடுகளுக்கும் அத்திவாரமாக அமைகின்றது. பின்னர் இங்கிருந்து இக்கலாசார பண்பாட்டு மரபுகள் கிழக்கின் ஏனைய பிரதேசங்களுக்கு கொண்டு செல்லப்பட்டு அவை கிழக்கு மாகாண பண்பாடுகளாக பொதுமைப்படுத்தப் பட்டுள்ளதையும் கண்டு கொள்ள முடியும். அது கிழக்கு முஸ்லிம்களின் சமூகப் பண்பாட்டின் தனித்துவத்தை எடுத்துக்காட்டுகின்ற ஒரு விடயமாக அமைகின்றது என்பதையும் இதன் மூலம் நாம் புரியலாம்.

**துணைநின்றவை**

1. அனஸ் எம்.எஸ்.எம்.( 2009), புத்தளம் முஸ்லிம்களின் வராலாறும் வாழ்வியலும்.அப்துல் அஸீஸ். ஐ.எல்.எம்.ஏ.(1907), இலங்கைச் சோனக இன வரலாறு ஒரு திறனாய்வுஇ சோனக இஸ்லாமிய கலாசார நிலையம் கொழும்பு.
2. அனுராதபுர மாவட்ட முஸ்லிம்கள் (1992), முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு, கொழும்பு
3. ஆசிரியல் குலாம், 2010, அதிர்வு, வெளியீடு தி/கிண்ணியா மத்திய கல்லூரி வெளியீடு 2010
4. ஆசிரியர குலாம், 2007, அல் / ஹிரா 40 வது வருட தினைவு மலர், வெளியீடு: தி/அல் ஹிரா மகளிர் வித்தியாலயம், கிண்ணயிா
5. ஆசிரியர் குழாம், 2015 மக்கள் மனங்களில் வாழும் மதார் ஆசிரியர்'' வெளியீடு கிண்ணியா மணவர் பேரவை
6. ஹபீபுல்லாஹ் எம.ரீ 2010, மர்ஹூம் ஏ.ஆர்.எம். அபூபக்கர் பனமைத்துவ அரசியல் ஆளுமை, வெளியீடு KI Media Group கிண்ணியா, இலங்கை
7. முஸ்இல் ஏ.சீ.எம். 2016, கிண்ணியாவின் முன்னோடிகள், வெளியீடு : குரள் பதிப்பகம், கிண்ணியா
8. கிண்ணியா, வெளியீடு: கிண்ணியா மாணவர் பேரவை 2006
9. முத்தலிப் எம்.எம். 2009 “ மறைந்து போகும் கிண்ணியாவழன் பாரம்பரியங்கள்'' வெளியீடு குரள் பதிப்பகம், கிண்ணியா.
10. Ismail, M.Z., 2005. Eastern Muslim Settlements, In: Proceedings of the 10th International Conference on Sri Lanka Studies, University of Kelaniya
11. Robert Perciva (1803),An Account of the Island of Ceylon: Containing Its History, Geography ,London.
12. Vasundhara Mohan, 1987, Identity Crisis of Sri Lankan Muslims, Mittal Publication,Delhi.
13. காலிதீன்.கே.எம்.எச்.(1986) இலங்கை முஸ்லிம்களின் வரலாறுஇ1986 பக்.23, அகில இலங்கை கதீப்மார் சம்மேளனம், கொழும்பு.
14. கந்தையா, வி.சி (1964) மட்டக்களப்பு தமிழகம் இ யாழ்ப்பானம்: ஈழகேசரிப் பொன்னையா நினைவு வெளியீட்டு மன்றம்.
15. காத்தான்குடி வரலாறு,(2004). காத்தான்குடி: பள்ளிவாயல்கள், முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனம்.
16. சரவணபவன்,2003, வரலாற்றுத் திருகோணமலை திருகோணமலை வெளியிட்டாளர்.
17. சிற்றம்பலம், சி.க,(1999) பண்டைய தமிழகம், குமரன் புத்தக இல்லம்.கொழும்பு.
18. சிவசண்முகம்.ஞ, (2000)இமட்டக்களப்பு குகன்குல முக்குவர் வரலாறும் மரபுகளும் விபுலம் வெளியீடு.

**நேர்காணல்:**

1. அஸீஸ்,எ,எல், அப்துல் மஜீத், 2017-09-04, ஓய்வு பெற்ற ஆசிரியர், கிண்ணியா
2. தௌபீக், 2017-09-03, ஓய்வு பெற்ற ஆசிரியர், கிண்ணியா

3. செரீப், 2017-09-04, கிழக்கு மகாண சபை மூதூர்.
4. நியாஸ் பதிவாளர் 2017-09-03 கிண்ணியா, திருமலை நீதிமன்றம்.
5. முத்தலிப் எஸ்.ஏ, 2017-08-18, ஆசிரியர், கிண்ணியா